**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 440/2020 P.W. 1/L.W.1 (u/s.244 Crpc)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. மரிய நேசம்** | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. சுரேஷ்குமார் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 28.06.2023.**

**புகார்தாரர் தரப்பு முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனது கணவர் சுரேஷ்குமார் கன்னியாகுமரி அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து வருகிறார். இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனது கணவரின் தம்பி ஆவார். எனக்கு 3 பிள்ளைகள் உண்டு. அதில் 2 ஆண்பிள்ளைகள், அவர்கள் சின்னபிள்ளையாக இருக்கும் போது அவர்கள் பெயரில் பாதுகாவலர் என்ற முறையில் இடம் வாங்கினேன். எனது கணவருக்கு பாத்தியப்பட்ட வீடும் நிலமும் சேர்த்து தான் வாங்கினோம்.

2. எங்களுக்கு வருமானத்திற்கு வேண்டியும் பிள்ளைகளின் நலன் கருதியும் அந்தயிடத்தில் ஒரு கடையை கட்டினோம். முறைப்படி கரம் கட்டி தான் கடையை கட்டினோம். அதன் பிறகு மின் இணைப்பு பெறுவதற்காக மின்சாரவாரியத்தில் மனுக்கொடுத்தோம். லைன் எடுத்து முடித்த பிறகு இ.பி அலுவலகத்திலிருந்து பார்க்க வந்தார்கள். அவர்கள் பார்த்துவிட்டு ஒரு சுவர் கட்டவேண்டும். சுவர் கட்டினால் 07.01.2019 அன்று மின்இணைப்பு தருவதாக சொன்னார்கள்.

3. அதற்காக 05.01.2019 அன்று கொத்தனாரையும், கையாளையும் பார்த்து பேசினேன். மறுநாள் வந்து கட்டித்தருவீர்களா என்று கேட்டேன். அவர்கள் ஞாயிற்றுக்கிழமை வரமுடியாது, இன்றைக்கு சாயங்காலம் வேலை முடிந்த பிறகு 05.01.2019 அன்று சாயங்காலம் சுவரை கட்டித்தருவதாக சொன்னார்கள். அதன் படி மாலை 06.30 மணி அளவில் வேலைக்கு வந்தார்கள். வேலை நடைபெற்றுக்கொண்டிருந்தது. 06.01.2019 அன்று அதிகாலை 01.30 மணி அளவில் வேலை முடியகூடிய தருவாயில் எதிரியான ரமேஷ்குமார் என்பவர் எனது வீட்டு காம்புவுண்ட் சுவர் ஏறி சாடி நான் வேலைக்கு விட்ட ஆட்களிடம் தேவடியாமோனே இங்க எதற்குடா வந்தீங்க, யாருக்கு கடை கட்டிக்கொடுக்க வந்தீர்கள் என்று தகாத வார்த்தைகள்பேசினார்கள். உடனே கொத்தனாரும், கையாரும் தள்ளி போய்விட்டார்கள். எங்களுக்குள் வாய்தகராறு நடந்தது.

4. பக்கத்தில் கிடந்த ஒரு கம்பை எடுத்து கட்டிய சுவரை கம்பை வைத்து தள்ளி கீழே விட்டார். சுவர் கீழே விழுந்துவிட்டது. சுவர் கீழே விழுந்தவுடன் எனக்கும் அவருக்கும் வாய்தகராறு நடந்தது.

என்னுடைய சத்தம் கேட்டு என் வீட்டில் இருந்த 2 பிள்ளைகளும் ஓடி வந்தார்கள். அப்போது தேவடியாமோளே நீ இருந்தால் தானே கடை கட்டுவாய் என்று குற்றம் சுமத்தப்பட்ட நபர் ரமேஷ்குமார் சொன்னார்.

5. கீழே விழுந்துகிடந்த ஒரு சிமெண்ட் கல்லை எடுத்து எனது தலையில் போட்டார். அதனை நான் எனது கையால் தடுக்கவே அது கையில் பட்டு எனது இடது காலில் பட்டு இரத்தம் வந்தது. எனது பிள்ளைகள் சத்தம் போட்டார்கள். எனது பிள்ளைகளின் சத்தம் கேட்டவுடன் குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஓடிவிட்டார். இந்த சம்பவத்தை பாலூரைச் சார்ந்த இருதயராஜ், கையாள் கிருஷ்ணன், எனது பிள்ளைகள் ஆகியோர்கள் பார்த்து என்னை எனது பிள்ளைகள் மருத்துவமனைக்கு சிகிட்சைக்காக ஆட்டோவில் ஏற்றிச்சென்றார்கள். மருத்துவமனையில் மருத்துவர் இல்லாததால் ஒரு நர்ஸ் தான் எனக்கு முதலுதவி சிகிட்சை அளித்தார். முதலுதவி அளித்துவிட்டு குளச்சல் அரசு மருத்துவமனைக்குபோகச் சொன்னார்கள். அங்கிருந்து காயத்தைப் பார்த்து ஆசாரிபள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு செல்லும்படி அனுப்பி வைத்தார்கள்.

6. ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் சிகிட்சையில் இருக்கும் போது கருங்கல் போலீசார் வந்து என்னைப் பார்த்தார்கள். என்னை விசாரித்துவிட்டு வாக்குமூலம் பெற்று எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். வழக்கு பதிவுச் செய்யலாம் என்று சொன்னார்கள். ஆனால் பதிவுச்செய்யவில்லை. 14.02.2019 ம் தேதி கருங்கல் நிலையம் சென்று உதவி ஆய்வாளரிடம் நான்என்னுடைய கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேட்டைக் கொடுத்தேன். அவர்கள் அதை வாங்கிக்கொண்டும் வழக்கு பதிவுச் செய்யவில்லை.

7. நான் இது தொடர்பாக காவல்துணை கண்காணிப்பாளருக்கு 15.02.2019 ம் தேதி பதிவுத் தபாலில் புகார் மனு அனுப்பினேன். அதன் பிறகும் நடவடிக்கை எடுக்காததால் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். எனது மனுவினை கோப்பிற்கு எடுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நான் காவல்துறைகண்காணிப்பாளருக்கு வழக்கு சம்மந்தமாக அனுப்பிய புகார் Ex.P.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. அவரது ஆஜர் விலக்களிப்பட்டுள்ளது. அவர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

குறுக்கு விசாரணை - இல்லை.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.